செ.வெ. எண்: 521 நாள்: 05.09.2012

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (5.9.2012) தலைமைச் செயலகத்தில், பள்ளிக் கல்வித்துறை சார்பில் 169 கோடியே 44 லட்சம் ரூபாய் செலவில் 268 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் புதிதாக கட்டப்பட்ட பள்ளிக் கட்டடங்கள், ஆய்வுக் கூடங்கள், அலுவலகக் கட்டடங்கள் உள்ளிட்ட பல்வேறு கட்டடங்களைக் காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள்.

மாணவச் சமுதாயத்திற்கு தேவையான வாய்ப்பும் வசதியும் வழங்கி அவர்களின் கல்வி கற்றலை ஊக்குவித்தால் நாடு உயரும் என்ற உயரிய நோக்கில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு எண்ணிலா திட்டங்களை மாணவ சமுதயாத்திற்கு செயல்படுத்தி வருகிறது.

இதன் அடிப்படையில், சேலம் மாவட்டத்தில் 10 கோடியே 37 லட்சத்து 3 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 11 பள்ளிக் கட்டடங்கள்; ஈரோடு மாவட்டத்தில் 4 கோடியே 88 லட்சத்து 52 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 7 பள்ளிக் கட்டடங்கள்; வேலூர் மாவட்டத்தில் 5 கோடியே 65 லட்சத்து 67 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 24 பள்ளிக் கட்டடங்கள்; கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 3 கோடியே 8 லட்சத்து 14 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 7 பள்ளிக் கட்டடங்கள்; அரியலூர் மாவட்டத்தில் 1 கோடியே 64 லட்சத்து 13 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 2 பள்ளிக் கட்டடங்கள்; தேனி மாவட்டத்தில் 1 கோடியே 48 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 3 பள்ளிக் கட்டடங்கள்; நாகப்பட்டினம் மாவட்டத்தில் 1 கோடியே 70 லட்சத்து 77 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 2 பள்ளி மற்றும் அலுவலகக் கட்டடங்கள்; நீலகிரி மாவட்டத்தில் 1 கோடியே 23 லட்சத்து 28 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 1 பள்ளிக் கட்டடம்; தூத்துக்குடி மாவட்டத்தில் 2 கோடியே 2 லட்சத்து 61 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 3 பள்ளிக் கட்டடங்கள்; கோயம்புத்தூர் மாவட்டத்தில் 4 கோடியே 68 லட்சத்து 76 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 5 பள்ளிக் கட்டடங்கள்; சிவகங்கை மாவட்டத்தில் 1 கோடியே 82 லட்சத்து 73 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 3 பள்ளிக் கட்டடங்கள்; தருமபுரி மாவட்டத்தில் 5 கோடியே 9 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 5 பள்ளி மற்றும் அலுவலகக் கட்டடங்கள்; காஞ்சிபுரம் மாவட்டத்தில் 11 கோடியே 96 லட்சத்து 79 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 14 பள்ளிக் கட்டடங்கள்; நாமக்கல் மாவட்டத்தில் 1 கோடியே 71 லட்சத்து

49 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 3 பள்ளிக் கட்டடங்கள்; கடலூர் மாவட்டத்தில் 10 கோடியே 43 லட்சத்து 17 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 12 பள்ளிக் கட்டடங்கள்; திருவண்ணாமலை மாவட்டத்தில் 24 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 36 பள்ளிக் கட்டடங்கள்; புதுக்கோட்டை மாவட்டத்தில் 12 கோடியே 95 லட்சத்து 5 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 16 பள்ளிக் கட்டடங்கள்; மதுரை மாவட்டத்தில் 4 கோடியே 21 லட்சத்து 63 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 8 பள்ளிக் கட்டடங்கள்; கரூர் மாவட்டத்தில் 15 கோடியே 8 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 17 பள்ளிக் கட்டடங்கள்; கன்னியாகுமரி மாவட்டத்தில் 62 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 6 பள்ளிக் கட்டடங்கள்; விழுப்புரம் மாவட்டத்தில் 7 கோடியே 69 லட்சத்து 66 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 10 பள்ளிக் கட்டடங்கள்; திருநெல்வேலி மாவட்டத்தில் 4 கோடியே 15 லட்சத்து 35 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 7 பள்ளிக் கட்டடங்கள்; விருதுநகர் மாவட்டத்தில் 17 கோடியே 36 லட்சத்து 2 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 22 பள்ளிக் கட்டடங்கள்; திருப்பூர் மாவட்டத்தில் 10 கோடியே 7 லட்சத்து 79 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 2 பள்ளிக் கட்டடங்கள்; திருவள்ளூர் மாவட்டத்தில் 3 கோடியே 12 லட்சத்து 74 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 6 பள்ளிக் கட்டடங்கள்; திருச்சி மாவட்டத்தில் 9 கோடியே 23 லட்சத்து 86 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 17 பள்ளிக் கட்டடங்கள்; பெரம்பலூர் மாவட்டத்தில் 45 லட்சத்து 73 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 7 பள்ளி மற்றும் அலுவலகக் கட்டடங்கள்; சென்னை மாவட்டத்தில் 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2 பள்ளிக் கட்டடங்கள்; இராமநாதபுரம் மாவட்டத்தில் 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2 பள்ளிக் கட்டடங்கள்; திருவாரூர் மாவட்டத்தில் 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2 பள்ளிக் கட்டடங்கள்; திண்டுக்கல் மாவட்டத்தில் 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 6 பள்ளிக் கட்டடங்கள், என மொத்தம் 169 கோடியே 44 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 268 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் புதிதாக கட்டப்பட்டுள்ள பள்ளிக் கட்டடங்கள், ஆய்வுக் கூடங்கள், அலுவலகக் கட்டடங்கள் உள்ளிட்ட பல்வேறு கட்டடங்களைக் காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 5.9.2012